


## ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ பெருமாள் திருக்கோயில்

ராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி

# ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்

(ஸ்ரீஸுதர்ஶந ஸம்ஹிதை)




ஹ்ருதய தாபத்தையும், கொடிய நோய்களையும் நொடியில் களையும்
ஸ்ரீ கநகவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ வைத்யவீரராகவப் பெருமாள், திருவள்ளூர்

# अमृतसंजीवनस्तोत्रम्

# ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்



ஸ்ரீ தந்வந்தரி பகவான்



ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ் மாருதி


**ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

ராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3.

Phone : 0413 - 2260096

## நூல் விவரம்


நூலின் பெயர் : ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்

நூல் வெளியீடு : ஸ்ரீ துர்முகி வருஷம், ஐப்பசி
தீபாவளி திருநாள் (அக்டோபர் 2016)

தொகுப்பு : ஸ்ரீ S. வாஸுதேவன் 9445390591

நூலின் அளவு : Demi 1/6

தாள் : 70 GSM மேப்லித்தோ

பக்கங்கள் : 32

வெளியிட்டோர் : ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்,
புதுச்சேரி

அச்சிட்டோர் : ஸ்ரீ மஹாலக்ஷ்மீ அன் கோ. 94441 58817

வடிவமைப்பு : ஸ்ரீவேங்கட ஸுப்ரமணியன் 98847 30145


## பொருளடக்கம்


ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம் - அவதாரிகை 3

ஸ்ரீ தந்வந்தரியின் மஹிமை 5

ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம் 6

ஸ்தோத்ர அர்த்தம் - பொருளுரை 20

ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம் 30

ஸ்ரீஸுதர்ஶந ஸம்ஹிதையில் உள்ள

# ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்

## அவதாரிகை

வானேறப் போமளவும் வாழ்வளிப்பதான திவ்ய ஸூக்திகள் நமது ஸத்ஸம்ப்ரதாயத்தில் புதைந்து கிடக்கின்றன. அவைகளில் அமூல்யமான ரத்நம் போன்ற ஒன்று, ஸ்ரீஸுதர்ஶந ஸம்ஹிதையில் காணக் கிடைக்கும் ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம். ஸ்ரீராம ராவண யுத்தம் நடந்த போது மயங்கிய ஸ்ரீராம லக்ஷ்மணர் களையும் உயிர் நீத்த வாநரர்களையும் மீண்டும் உயிர்ப்பிக்க ஸ்ரீ ஆஞ்சநேயர் ஹிமய மலையிலிருந்து ஸஞ்ஜீவி மலையைக் கொண்டு வந்தார். மூலிகையை ப்ரயோகிக்கும் முன்னமேயே யாவரும் அந்த மூலிகைக் காற்றின் விஶேஷத்தாலேயே உயிர்ப்பிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம்.

கலிகால விஶேஷத்தால் ஆபத்துக்கள், விரோதம், ஸுயநலம், தடைகள், கொலை, கொள்ளை இப்படிப்பட்ட தீய ஶக்திகள் மிதமிஞ்சி நம்மைத் தாக்கும் தருணம், பரம கருணையுடன் எம்பெருமான் மந்த்ர ரூபமாக ஸஞ்ஜீவிநி ஒன்றை நமக்கு நல்கி அருளியிருக்கிறார்.

இந்த ஸ்தோத்ரத்தின் ப்ரதி ஶ்லோக அர்த்தம் (பொருளுரை) இந்நூலில் தரப்பட்டுள்ளது. எம்பெருமானுடைய முத்தொழில் புரியும் பரத்வம், ஸர்வரோக நிவாரணமளிக்கும் ஸ்ரீ தந்வந்தரி பகவானின் மஹிமை, அமுதத்தைத் தக்காருக்கு மட்டுமே விநியோகித்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மோஹினி ஸ்வரூப ப்ரபாவம், அவர்தம் தஶாவதார விஜய வைபவம் இவைகளை விவரித்து, அடியார் தம் இயலாமையையும் ஸ்பஷ்டமாக விண்ணப்பித்து தம்மீது அமுதத் துளிகளைத் தெளிக்குமாறு வேண்டப்படுகிறது. இதனால் மஹா பயங்கரமான ரோகங்களும், ஶத்ரு பீடையும், தடைகளும் நீங்குவதை ப்ரத்யக்ஷமாகக் கண்டிருக்கிறோம். ஆயுள் வ்ருத்தி ஏற்படும். கர்ப்ப ஸ்த்ரீகளுக்கு ரக்ஷை உண்டாகின்றது. குழந்தைகள் பூர்ண ஆயுள் உள்ளவராய் பிறப்பர். மருத்துவர்கள் இந்த மந்த்ரத்தை ஜபிக்க அவர்களிடம் வரும் நோயாளிகள் நன்கு குணமடைவர். அஸாத்யமான காரியங்கள் நிறைவேறுகின்றன. இன்னும் என்ன தான் வேண்டும்? இந்த அபூர்வமான அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்து யாவரும் கலிதோஷங்கள் நீங்கி ஸுகமாக நீடூழி வாழ வேண்டும் என்பதே நாம் எம்பெருமானிடம் இரங்கிக் கேட்கும் வரமாகும்.

- ஸ்ரீமதி விஷ்ணுப்ரியாசாரி

ஈச்வரன், சக்தி, சாந்தி, சேஷன், சோபனம்.... முதலான வார்த்தைகளில் "ச" எழுத்தை எவ்வாறு உச்சரிக்க வேண்டுமோ அவ்வாறு ஶ், ஶ, ஶா, ஶே, ஶோ.... எழுத்துக்களை உச்சரிக்க வேண்டும்.

# ஸ்ரீ தந்வந்தரியின் மஹிமை

இவ்வுலகில் மிகவும் பழமையான வைத்ய முறையை உண்டாக்கியவர் ஸ்ரீ தந்வந்தரி பகவான். ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனுடைய அம்ஶமாக அவதரித்தவர் ஸ்ரீ தந்வந்தரி. அமுதத்திற்காக தேவர்களும், அசுரர்களும் திருபாற்கடலைக் கடைந்த பொழுது அம்ருதகலஶத்துடன் இவர் அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

ஆயுர்வேத சிகித்ஸையின் வகைகள் இவரால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இக்காலத்தில் செய்யப்படும் அதிநவீன சிகித்ஸைகள் அனைத்துமே இந்த எட்டு பிரிவுகளினுள் அடங்கியவைதான. ஒருகையில் அட்டைப்பூச்சியுடனும், மறுகையில் அம்ருதகலசத்துடனும் ஸ்ரீரங்கம், காஞ்சி வரதர் கோவில் முதலிய திவ்யதேஶங்களில் ஸ்ரீ தந்வந்தரி பகவானை நாம் தரிஶிக்கலாம். நம் தேஹத்தில் சுத்த ரத்தம் உண்டாக்கவும் மற்றும் நோயுண்டாக்கும் அசுத்த நீரை அகற்றவும் இந்த அட்டைபூச்சி கொண்டு செய்கிறார் வைத்யராஜரான ஸ்ரீ தந்வந்தரி பகவான். ஸ்ரீ தந்வந்த்ரி பகவான் ஆபரேஷன் செய்யும் முறையை விளக்குவதற்காக அட்டைபூச்சியை வைத்துள்ளார். வேதங்களில் "பிஷக்" என்று எல்லா வியாதிகளும் இந்த அட்டைபூச்சியை கொண்டு விலக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இவரைப் பற்றிய விளக்கம் அதர்வ வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆயுள், ஆரோக்யம், மட்டுமல்லாமல் மஹாலக்ஷ்மியுடன் தோன்றியதால் நல்ல வளமான செல்வத்தையும் அருளுபவர் ஸ்ரீ தந்வந்தரி, நோய், நொடியில்லாமல் வாழ்வதும் நல்ல செல்வத்துடன் வாழ்வதும் முக்யமல்லவா!

ஶரீரே ஜர்ஜரே பூதே வ்யாதிக்ரஸ்தே களேபரே!
ஔஷதம் ஜாஹ்நவீ தோயம் வைத்யோ நாராயணோ ஹரி: !!
என்று வைத்யநாராயணனாக ஸ்ரீ தந்வந்தரி பகவானை வழிபட வேண்டும்.

**- ஸ்ரீமதி விஷ்ணுப்ரியாசாரி**

# अमृतसंजीवनस्तोत्रम्

अथापरमहं वक्ष्येऽमृतसंजीवनं स्तवम् ।
यस्यानुष्ठानमात्रेण मृत्युर्दूरात्पलायते ॥ १

असाध्याः कष्टसाध्याश्च महारोगा भयंकराः ।
शीघ्रं नश्यन्ति पठनाद् अस्यायुश्च प्रवर्धते ॥ २

शाकिनीडाकिनीदोषाः कुदृष्टिग्रहशत्रुजाः ।
प्रेतवेतालयक्षोत्था बाधा नश्यन्ति चाखिलाः ॥ ३

दुरितानि समस्तानि नानाजन्मोद्भवानि च ।
संसर्गजविकाराणि विलीयन्तेऽस्य पाठतः ॥ ४

सर्वोपद्रवनाशाय सर्वबाधाप्रशान्तये ।
आयुः प्रवृद्धये चैतत् स्तोत्रं परममद्भुतम् ॥ ५

बालग्रहाभिभूतानां बालानां सुखदायकम् ।
सर्वारिष्टहरं चैतद् भलपुष्टिकरं परम् ॥ ६

ஸ்ரீ ஸுதர்ஶனஸம்ஹிதையில் உள்ள

# ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்

அதா2பரமஹம் வக்ஷ்யேऽம்ருதஸஞ்ஜீவநம் ஸ்தவம் ।
யஸ்யாநுஷ்டா2ந மாத்ரேண ம்ருத்யுர்தூ3ராத் பலாயதே ॥ 1

அஸாத்4யா: கஷ்ட ஸாத்4யாஶ்ச மஹாரோகா3 ப4யங்கரா: ।
ஶீக்4ரம் நஶ்யந்தி படீ2நாத்3 அஸ்யாயுஶ்ச ப்ரவர்த4தே ॥ 2

ஶாகிநீ டா3கிநீ தோ3ஷா: குத்3ருஷ்டி க்3ரஹ ஶத்ருஜா: ।
ப்ரேத வேதாள யக்ஷோத்தா2 பா3தா4 நஶ்யந்தி சாகி2லா: ॥ 3

து3ரிதாநி ஸமஸ்தாநி நாநாஜந்மோத்3 ப4வாநி ச ।
ஸம்ஸர்க3ஜ விகாராணி விலீயந்தேऽஸ்ய பாட2த: ॥ 4

ஸர்வோ பத்3ரவ நாஶாய ஸர்வபா3தா4 ப்ரஶாந்தயே ।
ஆயு: ப்ரவ்ருத்த4யே சைதத் ஸ்தோத்ரம் பரம மத்3பு4தம் ॥ 5

பா3லக்3ரஹாபி4 பூ4தாநாம் பா3லாநாம் ஸுக2 தா3யகம் ।
ஸர்வாரிஷ்டஹரம் சைதத்3 ப3ல புஷ்டிகரம் பரம் ॥ 6

बालानां जीवनायैतत् स्तोत्रं दिव्यं सुधोपमम् ।
मृतवत्सत्वहरणं चिरंजीवित्वकारकम् ॥ ७

महारोगाभिभूतानां भयव्याकुलितात्मनाम् ।
सर्वाधिव्याधिहरणं भयघ्नममृतोपमम् ॥ ८

अल्पमृत्युश्चापमृत्युः पाठादस्य प्रणश्यति ।
जलाग्निविषशस्त्रारिनखिश्रृङ्गिभयं तथा ॥ ९

गर्भरक्षाकरं स्त्रीणां बालानां जीवनप्रदम् ।
महारोगहरं नृणामल्पमृत्युहरं परम् ॥ १०

बाला वृद्धाश्च तरुणा नरा नार्यश्च दुःखिताः ।
भवन्ति सुखिनः पाठाद् अस्य लोके चिरायुषः ॥ ११

अस्मात्परतरं नास्ति जीवनोपाय ऐहिकः ।
तस्मात्सर्वप्रयत्नेन पाठमस्य समाचरेत् ॥ १२

आयुतावृत्तिकं वाथ सहस्त्रावृत्तिकं तथा ।
तदर्धं वा तदर्धं वा पठेदेतश्च भक्तितः ॥ १३

பா3லாநாம் ஜீவநாயைதத் ஸ்தோத்ரம் தி3வ்யம் ஸுதோ4பமம் ।
ம்ருத வத்ஸத்வ ஹரணம் சிரஞ்ஜீவித்வ காரகம் ॥ 7

மஹாரோகா3பி3 பூ4தாநாம் ப4யவ்யாகுலி தாத்மநாம் ।
ஸர்வாதி4 வ்யாதி4 ஹரணம் ப4யக்4நம் அம்ருதோபமம் ॥ 8

அல்ப ம்ருத்யுஶ்ச அபம்ருத்யு: பாடா2த3ஸ்ய ப்ரணஶ்யதி ।
ஜலாக்3நி விஷ ஶஸ்த்ராரி நகி2 ஶ்ருங்கி3 ப4யம் ததா2 ॥ 9

க3ர்ப்ப4 ரக்ஷாகரம் ஸ்த்ரீணாம் பா3லாநாம் ஜீவந ப்ரத3ம் ।
மஹா ரோக3 ஹரம் ந்ருணாம் அல்ப ம்ருத்யு ஹரம் பரம் ॥ 10

பா3லா வ்ருத்3தா4ஶ்ச தருணா நரா நார்யஶ்ச து3:கி2தா: ।
ப4வந்தி ஸுகி2ந: பாடா2த3ஸ்ய லோகே சிராயுஷ: ॥ 11

அஸ்மாத் பரதரம் நாஸ்தி ஜீவநோபாய ஐஹிக: ।
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந பாட2மஸ்ய ஸமாசரேத் ॥ 12

ஆயுதா வ்ருத்திகம் வாத2 ஸஹஸ்ர ஆவ்ருத்திகம் ததா2 ।
தத3ர்த4ம்வா தத3ர்த4ம்வா படே2தே3 தஶ்ச ப4க்தித: ॥ 13

कलशे विष्णुमाराध्य दीपं प्रज्वाल्य यत्नतः ।
सायं प्रातश्च विधिवत्स्तोत्रमेतत्पठेत्सुधीः ॥ १४

सर्पिषा हविषा वाऽपि संयावेनाथ भक्तितः ।
दशांशमानतो होमं कुर्यात्सर्वार्थसिद्धये ॥ १५

नमो नमो विश्वविभावनाय
नमो नमो लोकसुखप्रदाय ।
नमो नमो विश्वसृजेश्वराय
नमो नमो मुक्तिवरप्रदाय ॥ १६

नमो नमस्तेऽखिललोकपाय
नमो नमस्तेऽखिलकामदाय ।
नमो नमस्तेऽखिलकारणाय
नमो नमस्तेऽखिलरक्षकाय ॥ १७

नमो नमस्ते सकलार्तिहर्त्रे
नमो नमस्ते विरुजप्रकर्त्रे ।
नमो नमस्तेऽखिलविश्वधर्त्रे
नमो नमस्तेऽखिललोकभर्त्रे ॥ १८

सृष्टं देव चराचरं जगदिदं ब्रह्मस्वरूपेण ते
सर्वं तत्परिपाल्यते जगदिदं विष्णुस्वरूपेण ते ।
विश्वं संह्रियते तदेव निखिलं रुद्रस्वरूपेण ते
संसिञ्च्यामृत शीकरैर्हर महारिष्टं चिरं जीवय ॥ १९

கலஶே விஷ்ணும் ஆராத்$^{4}$ய தீ$^{3}$பம் ப்ரஜ்வால்ய யத்நத: ।
ஸாயம் ப்ராதஶ்ச விதி$^{4}$வத் ஸ்தோத்ர மேதத் படே$^{2}$த் ஸுதீ$^{4}$: ॥ 14

ஸர்ப்பிஷா ஹவிஷா வாऽபி ஸம்யாவே நாத$^{2}$ ப$^{4}$க்தித: ।
த$^{3}$ஶாம் ஶமாநதோ ஹோமம் குர்யாத் ஸர்வார்த்த$^{2}$ ஸித்$^{3}$த$^{4}$யே ॥ 15

நமோ நமோ விஶ்வ விபா$^{4}$வநாய
நமோ நமோ லோக ஸுக$^{2}$ ப்ரதா$^{3}$ய ।
நமோ நமோ விஶ்வ ஸ்ருஜேஶ்வராய
நமோ நமோ முக்தி வர ப்ரதா$^{3}$ய ॥ 16

நமோ நமஸ்தேऽகி$^{2}$ல லோகபாய
நமோ நமஸ்தேऽகி$^{2}$ல காமதா$^{3}$ய ।
நமோ நமஸ்தேऽகி$^{2}$ல காரணாய
நமோ நமஸ்தேऽகி$^{2}$ல ரக்ஷகாய ॥ 17

நமோ நமஸ்தே ஸகலார்த்தி ஹர்த்ரே
நமோ நமஸ்தே விருஜ ப்ரகர்த்ரே ।
நமோ நமஸ்தேऽகி$^{2}$ல விஶ்வ த$^{4}$ர்த்ரே
நமோ நமஸ்தேऽகி$^{2}$ல லோக ப$^{4}$ர்த்ரே ॥ 18

ஸ்ருஷ்டம் தே$^{3}$வ சராசரம் ஜக$^{3}$தி$^{3}$த$^{3}$ம் ப்$^{3}$ரஹ்ம ஸ்வரூபேண தே
ஸர்வம் தத் பரிபால்யதே ஜக$^{3}$தி$^{3}$த$^{3}$ம் விஷ்ணு ஸ்வரூபேண தே ।
விஶ்வம் ஸம்ஹ்ரியதே ததே$^{3}$வ நிகி$^{2}$லம் ருத்$^{3}$ர ஸ்வரூபேண தே
ஸம்ஸிஞ்சயாம்ருத ஶீகரைர் ஹர மஹாரிஷ்டம் சிரம் ஜீவய ॥ 19

योधन्वन्तरि संज्ञया निगदितः क्षीराब्धितो निःसृतो
हस्ताभ्यां जनजीवनाय कलशं पीयूषपूर्णं दधत् ।
आयुर्वेदमरीरचज्जनरुजां नाशाय स त्वं मुदा
संसिञ्चयामृत शीकरैर्हर महारिष्टं चिरं जीवय ।। २०

स्त्रीरूपं वरभूषणांबरधरं त्रैलोक्यसंमोहनं
कृत्वा पाययति स्म यः सुरगणान्पीयूषमत्युत्तमम् ।
चक्रे दैत्यगणान्सुधाविरहितान् संमोह्य स त्वं मुदा
संसिञ्चयामृत शीकरैर्हर महारिष्टं चिरं जीवय ।। २१

चाक्षुषोदधिसंप्लावभूवेदप झषाकृते ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ।। २२

पृष्ठमन्दरनिर्घूर्णनिद्राक्ष कमठाकृते ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ।। २३

याञ्चाछलबलित्रासमुक्तनिर्जर वामन ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ।। २४

धरोद्धारहिरण्याक्षघातक्रोडाकृते प्रभो ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ।। २५

யோ த4ந்வந்தரி ஸஞ்ஜயா நிக3தி3த: க்ஷீராப்3தி4தோ நி:ஸ்ருதோ
ஹஸ்தாப்4யாம் ஜந ஜீவநாய கலஶம் பீயூஷ பூர்ணம் த3த4த் ।
ஆயுர்வேத4மரீர சஜ்ஜந ருஜாம் நாஶாய ஸ த்வம் முதா3
ஸம்ஸிஞ்சயாம்ருத ஶீகரைர் ஹர மஹாரிஷ்டம் சிரம் ஜீவய ॥ 20

ஸ்த்ரீரூபம் வரபூ4ஷணாம் ப3ரத4ரம் த்ரைலோக்ய ஸம்மோஹநம்
க்ருத்வா பாயயதி ஸ்ம ய: ஸுரக3ணாந் பீயூஷ மத்யுத்தமம் ।
சக்ரே தை3த்யக3ணாந் ஸுதா4 விரஹிதாந் ஸம்மோஹ்ய ஸ த்வம் முதா3
ஸம்ஸிஞ்சயாம்ருத ஶீகரைர் ஹர மஹாரிஷ்டம் சிரம் ஜீவய ॥ 21

சாக்ஷுஷோ த3தி4ஸம்ப்லாவ பூ4வேத3 ப ஜ4ஷாக்ருதே ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 22

ப்ருஷ்ட2 மந்த3ர நிர்கூ4ர்ண நித்3ராக்ஷ கமடா2க்ருதே ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 23

யாஞ்சாச2ல ப3லித்ராஸ முக்தநிர்ஜர வாமந ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருதகணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 24

த4ரோத்3தா4ர ஹிரண்யாக்ஷகா4த க்ரோடா3க்ருதே ப்ரபோ4 ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 25

भक्तत्रासविनाशात्तचण्डत्व नृहरे विभो ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ २६

क्षत्रियारण्यसंछेदकुठारकर रैणुक ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ २७

रक्षोराजप्रतापाब्धिशोषणाशुग राघव ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ २८

भूभारासुरसंदोहकालाग्ने रुक्मिणीपते ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ २९

वेदमार्गरतानर्हविभ्रान्त्यै बुद्धरूपधृक् ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ ३०

कलिवर्णाश्रमास्पष्टधर्मर्द्धयै कल्कि रूपभाक् ।
सिञ्च सिञ्चामृतकणैश्चिरं जीवय जीवय ॥ ३१

असाध्याः कष्टसाध्या ये महारोगा भयङ्कराः ।
छिन्धि तानाशु चक्रेण चिरं जीवय जीवय ॥ ३२

अल्पमृत्युं चापमृत्युं महोत्पातानुपद्रवान् ।
भिन्धि भिन्धि गदाघातैश्चिरं जीवय जीवय ॥ ३३

ப4க்த த்ராஸ விநாஶாத்த சண்ட3த்வ ந்ருஹரே விபோ4 ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 26

க்ஷத்ரியாரண்ய ஸஞ்சே2த3 குடா2ரகர ரைணுக ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 27

ரக்ஷோராஜ ப்ரதாபாப்3தி4 ஶோஷணா ஶுக3 ராக4வ ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 28

பூ4பா4ரா ஸுரஸந்தோ3ஹ காலாக்3நே ருக்மிணீபதே ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 29

வேத3 மார்க்க3 ரதாநர்ஹ விப்4ராந்த்யை பு3த்3த4ரூப த்4ருக் ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 30

கலிவர்ணாஶ்ரமா ஸ்பஷ்ட த4ர்மத்3த4ர்மை கல்கி ரூபபா4க் ।
ஸிஞ்ச ஸிஞ்சாம்ருத கணைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 31

அஸாத்4யா: கஷ்டஸாத்4யா யே மஹாரோகா3 ப4யங்கரா: ।
சி2ந்தி4 தாநாஶு சக்ரேண சிரம் ஜீவய ஜீவய ॥ 32

அல்பம்ருத்யும் ச அபம்ருத்யும் மஹோத்பாதாந் உபத்3ரவாந் ।
பி4ந்தி4 பி4ந்தி4 க3தா3தா4தைஶ் சிரம் ஜீவய ஜீவய ॥ 33

अहं न जाने किमपि त्वदन्यत्समाश्रये
नाथ पदाम्बुजं ते ।
कुरुष्व तद्यन्मनसीप्सितं ते
सुकर्मणा केन समक्षमीयाम् ॥ ३४

त्वमेव तातो जननी त्वमेव
त्वमेव नाथश्च त्वमेव बन्धुः ।
विद्याधनागारकुलं त्वमेव
त्वमेव सर्वं मम देवदेव ॥ ३५

न मेऽपराधं प्रविलोकय
प्रभोऽपराध सिन्धोश्च दयानिधिस्त्वम् ।
तातेन दुष्टोऽपि सुतः सुरक्ष्यते
दयालुता तेऽवतु सर्वदाऽस्मान् ॥ ३६

अहह विस्मर नाथ न माँ
सदा करुणया निजया परिपूरितः ।
भुवि भवान् यदि मे नहि रक्षकः
कथमहो मम जीवनमत्र वै ॥ ३७

दह दह कृपया त्वं व्याधिजालं विशालं
हर हर करवालं चाल्पमृत्योः करालम् ।
निजजनपरिपालं त्वां भजे भावयालं
कुरु कुरु बहुकालं जीवितं मे सदाऽलम् ॥ ३८

அஹம் ந ஜாநே கிமபி த்வத$^3$ந்யத் ஸமாஶ்ரயே
நாத$^2$ பதா$^3$ம்பு$^3$ஜம் தே।
குருஷ்வ தத்$^3$யந் மநஸீப்ஸிதம் தே
ஸுகர்மணா கேந ஸமக்ஷமீயாம் ॥ 34

த்வமேவ தாதோ ஜநநீ த்வமேவ
த்வமேவ நாத$^2$ஶ்ச த்வமேவ ப$^3$ந்து$^4$:।
வித்$^3$யா த$^4$நாகா$^3$ர குலம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே$^3$வதே$^3$வ ॥ 35

ந மேऽபராத$^4$ம் ப்ரவிலோகய
ப்ரபோ$^4$ऽபராத$^4$ ஸிந்தோ$^4$ஶ்ச த$^3$யாநிதி$^4$ஸ் த்வம்।
தாதேந து$^3$ஷ்டோऽபி ஸுத: ஸுரக்ஷ்யதே
த$^3$யாலுதா தேऽவது ஸர்வதா$^3$ऽஸ்மாந் ॥ 36

அஹஹ விஸ்மர நாத$^2$ ந மாம்
ஸதா$^3$ கருணயா நிஜயா பரிபூரித:।
பு$^4$வி ப$^4$வாந் யதி$^3$ மே நஹி ரக்ஷக:
கத$^2$மஹோ மம ஜீவநமத்ர வை ॥ 37

த$^3$ஹ த$^3$ஹ க்ருபயா த்வம் வ்யாதி$^4$ஜாலம் விஶாலம்
ஹர ஹர கரவாலம் ச அல்பம்ருத்யோ: கராலம் ।
நிஜஜந பரிபாலம் த்வாம் ப$^4$ஜே பா$^4$வயாலம்
குரு குரு ப$^3$ஹுகாலம் ஜீவிதம் மே ஸதா$^3$ऽலம் ॥ 38

न यत्र धर्माचरणं न दानं
व्रतं न यागो न च विष्णुचर्चा ।
न पितृगोविप्रवरामरार्चा
स्वल्पायुषस्तत्र जना भवन्ति ॥ ३९

क्लीं श्रीं क्लीं श्रीं नमो भगवते जनार्दनाय
सकलदुरितानि नाशय नाशय
क्ष्रौं आमारोग्यं कुरु कुरु
ह्रीं दीर्घमायुर्देहि देहि स्वाहा ।
अस्य धारणतो जापादल्पमृत्युः प्रशाम्यति ।
गर्भरक्षाकरं स्त्रीणां बालानां जीवनं परम् ॥ ४०

शतं पञ्चाशतं शक्त्याऽथवा पञ्चाधिविंशतिम् ।
पुस्तकानां द्विजेभ्यस्तु दद्याद्दीर्घायुषाप्तये ॥ ४१

भूर्जपत्रे विलिख्येदं कण्ठे वा बाहुमूलके ।
संधारयेद् गर्भरक्षा बालरक्षा च जायते ॥ ४२

सर्वे रोगा विनश्यन्ति सर्वा बाधा प्रशाम्यति ।
कुदृष्टिजं भयं नश्येत्तथा प्रेतादिजं भयम् ॥ ४३

मया कथितमेतत्तेऽमृतसंजीवनं परम् ।
अल्पमृत्युहरं स्तोत्रं मृतवत्सत्त्वनाशनम् ॥ ४४

(सुदर्शनसंहितातः)

ந யத்ர த4ர்மா சரணம் ந தா3நம்
வ்ரதம் ந யாகோ3 ந ச விஷ்ணு சர்ச்சா ।
ந பித்ருகோ3 விப்ர வராம ரார்ச்சா
ஸ்வல்பாயுஷஸ் தத்ர ஜநா ப4வந்தி ॥ 39

க்லீம் ஶ்ரீம் க்லீம் ஶ்ரீம் நமோ ப4க3வதே ஜநார்த3நாய
ஸகல து3ரிதாநி நாஶய நாஶய

க்ஷ்ரௌம் ஆமாரோக்3யம் குருகுரு
ஹ்ரீம் தீ3ர்க்க4மாயுர் தே3ஹி தே3ஹி ஸ்வாஹா ।
அஸ்ய தா4ரணதோ ஜாபாத3ல்பம்ருத்யு: ப்ரஶாம்யதி
கர்ப்ப4ரக்ஷாகரம் ஸ்த்ரீணாம் பா3லாநாம் ஜீவநம் பரம் ॥ 40

ஶதம் பஶ்சா ஶதம் ஶக்த்யாऽத2வா பஞ்சாதி4 விம்ஶதிம் ।
புஸ்தகாநாம் த்3விஜே ப்4யஸ்து தத்3யாத்3
தீ3ர்க்கா4யுஷாப்தயே ॥ 41

பூ4ர்ஜ பத்ரே விலிக்2யேத3ம் கண்டே2 வா பா3ஹுமூலகே ।
ஸந்தா4ரயேத்3 க3ர்ப்ப4 ரக்ஷா பா3லரக்ஷா ச ஜாயதே ॥ 42

ஸர்வே ரோகா3 விநஶ்யந்தி ஸர்வா பா3தா4 ப்ரஶாம்யதி ।
குத்3ருஷ்டிஜம் ப4யம் நஶ்யேத் ததா2 ப்ரேதாதி3ஜம் ப4யம் ॥ 43

மயா கதி2த மேதத்தேऽம்ருத ஸஞ்ஜீவநம் பரம் ।
அல்பம்ருத்யு ஹரம் ஸ்தோத்ரம் ம்ருத வத்ஸத்வ நாஶநம் ॥ 44

(ஸுதர்ஶந ஸம்ஹிதாத:)

# ஸ்ரீ அம்ருதஸஞ்ஜீவிநி ஸ்தோத்ரம்

## - முழு ஸ்தோத்ர அர்த்தம் - பொருளுரை

01. எந்த ஸ்துதியை அநுஷ்டித்த (ஶ்ரத்தையுடன் பாராயணம் செய்த) மாத்திரத்தில் காலதேவதை(மரணம்) ஓடோடிப் போகுமோ, அத்தகைய ஸ்ரீ அம்ருத ஸஞ்ஜீவிநி ஸ்துதியைப் புகலாக விரிக்கின்றேன்.

02. இந்த ஸ்துதியை பாராயணம் செய்வதால் தாங்கவொணா துன்பத்திலிருந்து நிவ்ருத்தியும், அதிபயங்கரமான நோயின் தாக்கத்திலிருந்து விடுதலையும் உடனேயே ஏற்பட்டு, ஆயுள் விருத்தியடைகின்றது.

03. ஶாகினி, டாகினி தோஷங்கள், துர்த்ருஷ்டி தோஷங்கள், க்ரஹபீடை, ஶத்ரு பீடைகள், யக்ஷ, ப்ரேத பைஶாசங்கள் மூலம் ஏற்படும் தடைகள் போன்ற உபத்ரவங்கள் பூரணமாக நசித்து விடுகின்றன.

04. அநேக பல முற்பிறவிகளில் உழன்று நாம் சேகரித்த பாபங்கள், துஷ்ட சேர்க்கையால் ஏற்படுகின்ற மனமாற்றம் யாவும் இந்த ஸ்தோத்ர பாராயண விஶேஷத்தால் மறைந்து விடுகின்றன.

05. ஸகல உபத்ரவங்களையும் நீக்கி, எல்லா தடைகளையும் விலக்கி, ஶாந்தியையும், அமைதியையும் நல்கி, இந்த அற்புத ஸ்துதி, ஆயுளையும் வளர்க்கும்.

06. குழந்தைகளுக்கு பூதங்கள், பாப க்ரஹங்கள் போன்றவற்றால் நேரும் துன்பங்கள் விலகி, ஸுகமேற்படும். ஸகலவித அரிஷ்டங்களையும், தீமைகளையும் விலக்கி பலம், புஷ்டி இவைகளில் நிலைப்படுத்தும்.

07. இந்த ஸ்துதி குழந்தைகளின் நீண்ட ஆயுளுக்கு திவ்யமான அம்ருதம் போன்று விளங்கி, மரண பயத்தினின்றும் மீட்டு, குழந்தைகளுக்கு சிரஞ்ஜீவித்வம் தந்தருள்கின்றது.

08. அம்ருதம் போன்ற இந்த ஸ்துதி மஹா ரோகங்கள், பயம், ஸஞ்சலம், நீங்காத கவலை இவற்றால் பீடிக்கப்பட்டவர்களைக் காத்து, ஆதிவ்யாதி எனப்படும் கொடிய நோய்களையும், பயத்தையும் அழிக்கவல்ல அமுதம் போன்றது.

09. அல்ப ஆயுஸ் மரணம், அகால (திடீர்) மரணம் போன்றவை இந்த ஸ்துதியை படிப்பதால் விலகும். ஜலம், நெருப்பு, விஷம், ஆயுதம், பித்ரு, கோரமான நகம், கொம்பு இவற்றால் ஏற்படும் பயத்தை அறவே போக்கும்.

10. பெண்களுக்கு கர்ப்ப ரக்ஷையும், ஸுகப்ரஸவ தன்மையும் உண்டாகும். பெரும் ரோகங்கள் விலகி, மனிதர்களின் சிறு ப்ராய (வயது) மரணம் ஸம்பவிக்காமல் காப்பாற்றும்.

11. சிறுவரோ, வயது முதிர்ந்த வ்ருத்தரோ, இளைஞரோ, புருஷரோ, ஸ்த்ரீயோ, துன்பமுற்றால் இந்த ஸ்துதி அதை நிவ்ருத்தி செய்து, ஸுக ஜீவர்களாக்கி, ஆயுஷ்மான் ஆக்கும்.

12. ஜீவனோபாயத்திற்கும், ஐஹிக பலன்களுக்கும் இந்த பூமியில் இந்த ஸ்துதியை விடவும் உயர்ந்த ஓர் உபாயம் மற்றொன்றில்லை. எனவே ஸகலவித முயற்சிகளையும் மேற்கொண்டாவது இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்தல் வேண்டும்.

13. பத்தாயிரம் முறைகளோ, ஆயிரம் (ஸஹஸ்ர) முறைகளோ, அதில் பாதியோ, அதனினும் பாதியோ ஆகிய முறைகள் படித்தாலும் பக்தியோடு பாராயணம் செய்தல் வேண்டும்.

14. கலசத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஆவாஹனம் செய்து, மிகுந்த ப்ரயாஸையுடன், தீபம் ஏற்றி வைத்து, முறையுடன் நெறி பிறழாமல் காலையும், மாலையும், இந்த ஸ்தோத்ரத்தை உளமார ஜபித்தல் வேண்டும்.

15. ஶ்ரத்தா பக்தியுடன், நெய்யுடன் அல்லது ஹவிஸ்ஸுடன் கூடிய ஹோமம் செய்வித்தாலும், தமாம்ஸமான ஆஹுதிகள் தந்தாலும் ஸகல விதமான காரியங்களும் மனோபீஷ்டங்களும் நிறைவேறும்.

16. உலகம் உண்டாகக் காரணமாயுள்ள ஜகத் காரணனுக்கு, உலகத்திற்கு ஸுகம் தந்தருளும் பரமகாருணிகனுக்கு வந்தனங்கள்! உலகை ஸ்ருஷ்டித்து, அவனியி லுள்ளோர்க்கு மோக்ஷ வரம் தந்தருளும் வரதனுக்கு நமஸ்காரங்கள்.

17. அகில உலகத் தலைவனுக்கு, ஸகல கார்யங் களையும் நல்கியருள்பவனுக்கு நமஸ்காரங்கள். லீலாவிபூதி யெனும் பதினான்கு வ்யாபாரங்களுக்குத் தலைவனும், ஸமஸ்த உலகங்களை ரக்ஷிப்பவனுமான நாயகனுக்கு வந்தனங்கள்.

18. ஸகலவிதமான கஷ்டங்களைக் களைபவரும், நன்மைகள் விளைய காரணபூதனுமாகிய எம்பெருமானுக்கு வந்தனங்கள்! அகில உலகையும் தாங்குபவரும், அகில உலகப் பதியுமான எம்பெருமானுக்கு நமஸ்காரங்கள்.

19. சதுர்முக ப்ரஹ்மாவின் அந்தர்யாமியாக விளங்கி படைக்கும் தொழிலைச் செய்பவர் நீரே! ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபமாக உலகை ரக்ஷணம் செய்யும் தொழிலைச் செய்பவரும் நீரே!

யுகந்தோறும் ப்ரளய காலத்தில் ருத்ர ஸ்வரூபியாக உலகை அழிக்கும் தொழிலைச் செய்பவரும் நீரே! ஆகையால் பரஸ்வரூபியான நீர் என் அரிஷ்டங்களைக் களைந்து, அதிவேகமாக அமுதத்துளிகளை ப்ரவாஹமாகப் பெய்து, அது எக்காலமும் தங்கியிருக்க க்ருபை செய்ய வேண்டும்.

20. யாரொருவர் திருப்பாற்கடலில் உதித்த தன்வந்தரியாய் தமது திருக்கரங்களில் அமுதம் நிறைந்த கலசத்தை ஏந்திய வண்ணம் ஸஜ்ஜனர்களின் மீது கடாக்ஷத்தை நல்கியவரோ, அப்பேர்பட்ட நீர் (தேவரீர்) அரிஷ்டங்களை நீக்கி, அமுதப்ரவாஹத்தால் ஆயுர்வேத பாக்யவான்களாக நிலை பெற்றிருக்கும்படிச் செய்கின்றீர்.

21. நீர் திருப்பாற்கடலில் அமுதம் திரண்டு வந்த போது ஸகலவித பூஷணங்களையும் அழகிய வஸ்த்ரங் களையும் அணிந்து பெண்ணுருவம் கொண்டு மூன்று உலகங்களையும் மோஹிக்கும்படிச் செய்து, தேவர்களுக்கு மட்டுமே உத்தமமான அமுதம் கிடைக்கும்படிச் செய்து, அரக்கர் குழாத்தை மயக்கி, அமுதம் பெறுவதிலிருந்து விலக்கி ஸாத்விக வ்யாபாரம் நடத்தினீர் அன்றோ? அத்தகைய நீர் அடியேன் பாலும் அமுதத்துளிகளைத் தெளித்து எக்காலமும் நிலைத்திருக்கும்படி அநுக்ரஹிக்க வேண்டும்.

22. மத்ஸ்யாவதாரம் செய்து கடலினின்று வேதங்களை மீட்டு மறுபடி உலகம் ஏற்படச் செய்த ப்ரபுவே! என் மீது அமுதத்துளிகளை தெளித்து காப்பாற்றவும்.

23. திருப்பாற்கடலை கடைய மந்தரமலை மத்தாகத் திகழ்ந்தது. அது நழுவி விழ ஸ்ரீகூர்மமாக அவதரித்து மலையைத் தன் முதுகில் தாங்கி அமுதம் கிடைக்க கருணை புரிந்தவரே! என்மீது அமுதத்துளிகளை ப்ரவஹிக்கச் செய்யவும்.

24. யாசிப்பனைப்போல வந்து கபடமாக பலிச் சக்ரவர்த்தியை பரீக்ஷித்தாலும். அவனுக்கு ரக்ஷணமும் செய்த வாமனப் பெருமானே! என்மீதும் அமுதத் துளிகளைத் தெளித்து ரக்ஷிக்க வேண்டும்.

25. ஹிரண்யாக்ஷனை கோபத்துடன் ஸம்ஹரித்து பூமியை உத்தாரணம் செய்து தாங்கிய, வராஹ அவதாரமெடுத்த ப்ரபுவே! என் மீது அமுதத் துளிகளைச் சிந்தி ரக்ஷிப்பீராக!

26. பக்தனைக் காப்பாற்ற ஸிம்ஹம் கலந்த நரரூபம் கொண்டு அவதரித்த நரசிங்கப் பெருமானே! அடியேன் மீதும் அமுதத்தை செலுத்தி காப்பாற்ற வேண்டும்,

27. ரேணுகாதேவியின் குமாரராக அவதரித்து பரசு வெனும் ஆயுதத்தைக் கையில் ஏந்தி, க்ஷத்ரிய வம்ஶத்தை நிர்மூலம் செய்த பரசுராமரே! அடியேன் மீது அமுதத் துளிகளைத் தெளிக்க வேண்டுகிறேன்.

28. ஸமுத்ரராஜனின் கோரிக்கையை ஏற்று கடலை வற்றச் செய்யாமல் மன்னித்து, தமது அம்பு விஷம் நிறைந்த வேறு பிரதேசத்தைத் தாக்கி விஷமற்றதாகச் செய்த கருணையுள்ளம் கொண்ட ஸ்ரீராமன் நீரேயல்லவா? அடியேனுக்கு அமுதம் ப்ரஸாதித்தருள வேண்டும்.

29. பூபாரத்தைத் தீர்த்து தேவர்களை ரக்ஷித்த காலாக்னியே! ருக்மிணீ நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணா! அடியேன் மீது அமுதத்தை ப்ரவஹிக்க வேண்டும்.

30. வேதம் கூறும் வழிமுறைகளைத் தவறாக பிரயோகித்து ஜீவஹிம்ஸை செய்யும் துன்மார்க்கத்தில் செல்பவரைத் தடுத்து புத்த ரூபமெடுத்து அஹிம்ஸையை போதித்தவரே! அடியேனுக்கு அமுதம் அருள வேண்டும்.

31. கலியுகத்தில் வர்ணாஶ்ரம தர்மங்கள் அடியோடு கைவிடப்பட்டு தர்மத்திற்கு க்லானி நேரும் போது கல்கியாக அவதரித்து மறுபடியும் க்ருதயுக தர்மத்தை நிலைநாட்டும் ஸங்கல்பம் செய்தவரே! அடியேனுக்கு அமுதம் அருள வேண்டும்.

32. அஸாத்யமான, மிகவும் ப்ரயாஸைப்பட்டு வெல்லக் கூடிய பயங்கரமான வியாதிகளை எளிதில் நாசம் செய்யும் தேவரீரின் ஸங்கல்ப ஸ்வரூபமாகத் திகழும் ஸ்ரீ சக்ரத்தாழ்வான் அமுதத்தை நல்கி சிரஞ்ஜீவி ஆக்கி விடுகின்றார்.

33. கதையைத் தரிக்கும் உமது அருளால் அல்ப ஆயுளில் மரித்தல், அபம்ருத்யு நேருதல், மஹா உத்பாதம், உபத்ரவங்கள் ஆகியவற்றினின்று ரக்ஷிக்கப்பட்டு சிரஞ்ஜீவித்வம் நல்கப் பெறுகின்றது.

34. உமது திருவடிக் கமலங்களை ஆஶ்ரயித்து அதுவே பற்றுக்கோலாக இருப்பது தவிர வேறு புகல் அறியேன். வேறு ஒருவராலும் செய்ய இயலாத, நின் அபாரமான நற்காரியங்களால் அடியேனின் நல்ல மனோரதம் ஸபலமாகுமாறு செய்ய வேண்டும்.

35. நீரே அடியேனுடைய தகப்பன், நீரே அடியேனை ஈன்ற தாய். நீரே தலைவன், நீரே சுற்றம், கல்வி, பொக்கிஷம், குலம் யாவும் ஆவீர். ஸகலமும் அடியேனுக்கு தேவாதிதேவனான நீர்தான்.

36. அடியேன் செய்துள்ள அபராதங்களை கருத்தில் கொள்ளாதீர். அடியேன் அபராதக்கடல், தேவரீரோ கருணையின் எல்லை நிலம். ஒரு தந்தை துஷ்டனாக இருக்கும் புத்திரனையும் நன்கு ரக்ஷிப்பான். ஹே தயாளு! அடியேனை தேவரீரும் தயை கொண்டு அவ்விதமே எப்பொழுதும் ரக்ஷிக்க வேண்டும்.

37. அடியேனை தயவுசெய்து மறந்துவிட வேண்டாம். ஸஹஜமான கருணையால் தேவரீரின் இதயம் முழுவதும் நிறைந்துள்ளது. அப்படியிருக்க வேறு கதி ஏது எனக்கு? தேவரீர் காப்பாற்ற மறுத்தால் அடியேனுக்கு வேறு கதி இல்லை.

38. எங்கும் வ்யாபித்து இருக்கும் துர்வ்யாதிகளை தஹித்து விடு! சிறு வயது மரணங்களை உன் ஹஸ்த விசேஷத்தால் போக்கி விடு! ஜீவன்களை கருத்துடன் பரிபாலிக்கும் உன்னை உளமார பஜிக்கின்றேன். நீர் நீண்ட காலம் அடியேன் வாழும்படியாகச் செய்ய வேண்டும்.

39. எங்கு தர்மம் அனுஸரிக்கப்படவில்லையோ, எங்கு தானம், வ்ரதம், யாகம், விஷ்ணு சர்ச்சை இவைகள் நடைபெறுவதில்லையோ, எங்கு ப்ராம்மணர்கள், பசு, பித்ருக்கள் கௌரவக்கப்படுவதில்லையோ அவ்விடங் களில் அல்ப ஆயுள் உள்ள குழந்தைகள் பிறக்கின்றன.

40. இதில் பீஜாக்ஷரங்கள் நிறைந்த "நமோ பகவதே ஜனார்த்தனாய" எனும் மூல மந்திரம் உச்சாரணம் செய்யப் பெற்று "எல்லா கஷ்டங்களையும் நீக்கு, வ்யாதிகளைப் போக்கி ஆரோக்யம் நல்கு, நீண்ட ஆயுளைக் கொடு" என்று வேண்டப்படுகின்றது. இதைக் கவசமாகத் தரிப்பவன் அல்பாயுளில் மரணமடைவதிலி ருந்து தப்புகிறான். ஸ்த்ரீகள் கர்ப்ப ரக்ஷை பெறுகின்றர். சிறுவர்கள் பூர்ண ஆயுளைப் பெறுகிறார்கள்.


41. நூறு, ஐந்நூறு, இருபத்தைந்து முறைகள் தமது சக்திக்கேற்ப ஜபித்தல், உத்தம பிராம்மணர்களுக்கு இந்த துதியை தானம் செய்தல், இதன் மூலம் தீர்க்காயுளைப் பெறுகிறான்.

**42.** ஓலையில் இந்த துதியை எழுதினாலும், தோளில், நெஞ்சில் தரித்தாலும் கர்ப்ப ரக்ஷையும், சிறுவர்கள் ரக்ஷிக்கப்படுவதும் நிகழ்கிறது.

**43.** எல்லாத் தடைகளும் நீங்கும். எல்லா வியாதிகளும் நீங்கும். ப்ரேத பயம், கெட்ட திருஷ்டி தோஷம் யாவும் விலகும்.

**44.** என்னால் சொல்லப்பட்ட ம்ருத ஸஞ்ஜீவனம் எனும் பரம ஸ்துதியானது அல்ப ஆயுஸ் மரணத்தைப் போக்கும். பால்ய வயஸ் (இள வயது) மரணத்தை நசிக்கும்.

**- ஸுதர்ஸந ஸம்ஹிதை.**



த்ருஷ்டி தோஷம், ஸர்ப்ப, ராஹு-கேது தோஷம் விலக்கும் ஸ்ரீ ஊரகத்தான், ஸ்ரீ உலகளந்தப் பெருமாள் திருக்கோவில். காஞ்சிபுரம்.

# ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம்

**மார்க்கண்டே3ய உவாச:-**

1. நாராயணம் ஸஹஸ்ராக்ஷம் பத்3மநாப4ம் புராதனம்।
ப்ரணதோஸ்மி ஹ்ருஷீகேஶம் கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

2. கோ3விந்த3ம் புண்ட3ரீகாக்ஷம் அநந்தம் அஜமவ்யயம்।
கேஶவம் ச ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

3. வாஸுதே3வம் ஜக3த்யோநிம் பாதுவர்ண மதீந்த்3ரியம்।
தா3மோத3ரம் ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

4. ஶங்க2 சக்ரத4ரம் தே3வம் ஶன்ன ரூபிணமவ்யயம் ।
அதோ2க்ஷஜம் ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

5. வாராஹம் வாமனம் விஷ்ணும் நரஸிம்ஹம் ஜனார்த4னம்।
மாத4வம் ச ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

6. புருஷம் புஷ்கரம் புண்யம் க்ஷேமபீஜம் ஜக3த்பதிம்।
லோகநாத2ம் ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

7. பூதாத் மானம் மஹாத்மானம் ஜக3த்யோநிம் அயோநிஜம்।
விஶ்வரூபம் ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

8. ஸஹஸ்ர ஶிரஸம் தே3வம் வியக்தாவ்யக்தம் ஸநாதநம்।
மஹாயோக3ம் ப்ரபந்நோஸ்மி கிம் மே ம்ருத்யு கரிஷ்யதி॥

9. இத்யுதீரித மாகர்ண்ய ஸ்தோத்ரம் தஸ்ய மஹாத்மந ।
அப4யாதஸ் ததோ ம்ருத்யுர் விஷ்ணு தூதைஸ்ச பீடி3த ॥

10. இதிதேன ஜிதோ ம்ருத்ஹரமார்க்கண்டே3யேந தீ4மதா ।
ப்ரஸந்ந புண்ட3ரீகாக்ஷே ந்ருஸிம்ஹே நாஸ்தி துர்லப4ம் ॥

11. ம்ருத்யுஞ்ஜயமிதம் புண்யம் ம்ருத்யுப்ரஶமநம் ஶுப4ம் ।
மார்க்கண்டே3ய ஹிதார்த்தா2ய ஸ்வயம் விஷ்ணுருவாசஹ ॥

12. யஇத3ம் பட2தே ப4க்த்யா த்ரிகாலம் நியதம் ஶுசி: ।
ந அகாலே ம்ருத்யுஸ்ய ஸ்யாத்3த4ரஸ்யாச்2யுத சேத3ஸ ॥

13. ஹ்ருத்3பத்3ம மத்4யே புருஷம் புராணம்
நாராயணம் ஶாஶ்வதம் ஆதி3தே3வம் ।
ஸஞ்சிந்த்ய ஸூர்யாத3பி ராஜமாநம்
ம்ருத்யும் யோகீ3 ஜிதவாம்ஸ்ததை3வ ॥

ஶ்ரீ ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்



ஶ்ரீ உலகளந்தப் பெருமாள் காஞ்சிபுரம்.




ஶாபானுக்ரஹ ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் 25வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்
ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேஶிகன்
பஞ்சப்ருந்தாவனம், ந்ருஸிம்ஹபுரம், கும்பகோணம்


அடியவர் ஶாபங்களை அநுக்ரஹமாக மாற்றி
அருள்புரியும் ஸ்ரீகருடாம்ஶ ஆசார்யன்

## இந்த ஸ்ரீமத் அழகியசிங்கர் விஷயமான தனியன்

ஸ்ரீவாஸ வீரரகுவர்ய பராங்குஶாதி
ராமாநுஜார்யமுநிபிர் குருஸார்வ பௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பர்பூர்ணபோதம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிஶேகர மாஶ்ரயாம: ||



ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ அண்ணன் பெருமாள்
திருவெள்ளக்குளம், திருநாங்கூர் திருப்பதிகள், சீர்காழி



ஸகலவித துக்கங்கள், தடைகள், ஆபத்துக்களை நீக்கி
ஆயுள், ஆரோக்யம், அமைதி, ஐஸ்வர்யம் நல்கும்

# ஸ்ரீ தன்வந்தரி பகவான்

Printed by : **Sri Mahalakshmi & Co.,** Mobile : 94441 58817